# தமிழ் மொழியும் இலக்கியமும்
## தரம் 10, 11
## இலக்கியத்தொகுப்பு

## அலகு 07
## நாட்டார் பாடல்கள்



## வினா விடைத்தொகுப்பு

**கடந்த கால க.பொ.த (சா/த) வினாக்களுடன் ஒப்பிட்டு நோக்கப்பட்டுள்ளது**

தொகுப்பாசிரியர்: செ.ராஜ்குமார்

**"உம்மைக் கடந்து செல்லும் நேரங்கள் உன் வாழ்க்கையை வளமாக்க வாய்ப்பான காலங்கள்"**

**No - 15A, Anumar Street, Nochchimunai, Batticaloa T.P 0772926914**

## அலகு – 07

## நாட்டார் பாடல்கள்

- ❖ கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்களை எடுத்தியம்பும் பாடல்கள் நாட்டார் பாடல்கள் எனப்படும்.
- ❖ இப் பாடல்கள் கிராமியப் பாடல்கள், நாட்டுப்புற பாடல்கள், பாமரப் பாடல்கள், வாய்மொழிப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள் எனப் பல பெயர்களால்அழைக்கப் படுகின்றன.
- ❖ கிராமப் புற மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான தன்மைகளை இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.
- ❖ நாட்டார் பாடல்கள் உணர்ச்சி நிறைந்தவை, இசையுடன் பாடுவதற்கு ஏற்றவை.
- ❖ தாலாட்டுப் பாடல், தொழிற்பாடல்கள் (மீனவர் பாடல், அரிவி வெட்டுப் பாடல், ஏர்ப்பாட்டு, உழவுப் பாட்டு) காதல் பாட்டு,விளையாட்டுப் பாட்டு, நலுங்குப் பாடல், மருத்துவிச்சி வாழ்த்து, ஒப்பாரிப் பாடல் எனப் பல வகையான பிரிவுகளை நாட்டார் பாடல்களில் காணலாம்.

**இப் பாடப்பகுதியில்.....**

- **ஏர்ப்பாடல்**
- **அரிவி வெட்டுப் பாடல்**
- **மீனவர் பாடல்**
- **காதல் பாட்டு**

எனும் நான்கு விதமான நாட்டார் பாடல்களை உள்ளடங்கியுள்ளது.

### 01. ஏர்ப்பாடல்

- ❖ வயலில் ஏர் பூட்டி உழும் போது பாடப்படும் பாடல் இதுவாகும்.

**பட்டி பொருக வேணும் தம்பிரானே..** எனத் தொடங்கும் இந் நாட்டார் பாடலில், மாடுகளின் பெருக்கம், மழை பெய்து நாடு செழிக்க வேண்டும், உழவுத் தொழில் மேன்மையடைய வேண்டும், உலகத்தில் மக்கள் இனிது வாழ வேண்டும் எனும் பரந்த மனப்பாங்கு எடுத்துரைக்கபட்டுள்ளதை காணமுடிகின்றது.

**குறுவினாக்கள்**

1. **“ பட்டி பெருக வேணும் தம்பிரானே**
   **பாற்பானை பொங்கவேண்டும்...**

   அ. இங்கு தம்பிரான் எனப்படும் கடவுள் யார்?
   சிவபெருமான்
   ஆ. இப் பாடல் எத் தலைப்பில் இடம்பெற்றுள்ளது?
   தொழிற்பாடல் (ஏர்ப்பாட்டு)
   இ. பட்டி பெருதல் எனும் தொடரின் விளக்கம் யாது?
   பட்டியில் மாடுகளின் எண்ணிக்கை பெருகுதல்

2. **“ மேழி பெருக வேணும் தம்பிரானே**
   **மேதினியோர் வாழ வேண்டும்...**

   அ. மேழி என்பது உணர்த்தும் பொருள் யாது?
   கலப்பை, செல்வம்
   ஆ. மேதினி என்பதன் பொருள் யாது?
   உலகம்
   இ. மேழி பெருகுதல் என்பதன் கருத்து யாது?
   செல்லம் பெருகுதல்



S.Rajkumar

## கட்டமைப்பு வினாக்கள்

**1. இப் பாடலில், உழவர்களின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுகின்றது? சிவபெருமானிடம் வேண்டப்படுபவை யாவை? ( O/L 2016 02. II)**

இந் நாட்டார் பாடலில் ஊடாக, குறித்த ஒரு கிராமம் மீதும் அக் கிராமத்தில் வாழ்கின்றவர் நலனில் கொண்டுள்ள நலனும் அழகுற எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் சிவபெரு மானிடம் வேண்டிக்கொள்வதன் ஊடா அத்தகு பரந்த மனநிலை புலப்படுகின்றது. அவற்றை நோக்கும் போது,

- பட்டியில் மாடுகளின் எண்ணிக்கை பெருக வேண்டும் என வேண்டுதல்
- பாற்பானை அதிகளவில் பொங்குவதற்கும் நெல்லும், பாலும்நிறைந்திருக்க வேண்டும் என வேண்டுதல்
- செல்வம் எங்கும் பெருக வேண்டும் என வேண்டுதல்
- உலகில் உள்ளவர்கள் நன்றாக வாழ வேண்டும் என வேண்டுதல்
- நாடு நன்றாக செழித்திருக்க வேண்டும்
- மழை நாட்டில் நன்றாக பெய்ய வேண்டும்
- உழவுத் தொழில் சிறப்புற வேண்டும் இதனால் எல்லோரும் சிறப்பாக வாழவேண்டும் என கூறியுள்ளனர்

என்பவற்றின் ஊடாக பரந்துபட்ட மனப்பாங்கு வெளிப்பட்டு நிற்பதைக் காணலாம்.

**2. பாற்பானை பொங்க வேண்டும்.. மற்றும் மேழி பெருக வேண்டும் எனும் தொடர்களில் வெளிப்படும் சிறப்பு யாது?**

இந் நாட்டார் பாடலில் பாற்பானை பொங்க வேண்டும் மற்றும் மேழி பெருக வேண்டும் எனும் தொடர்களை கருத்தூன்றி பொருள் காணும் போது,மாடுகளிடம் இருந்து நிறைவான பால் கிடைக்கப்பெற்று, வயலில் விளையும் நெற்கதிர்களை அரிசியாக்கி அவற்றைக் கொண்டு நிறைவாக பால் விட்டு பொங்கல் பொங்க வேண்டும் என இங்கு வேண்டப் படுகின்றது. மேலும் மேழி என்பது கலப்பை எனவும் செல்வம் எனவும் இரு பொருளைக் குறித்து நிற்கின்றது. ஆக கலப்பையின் வாயிலாக வயலில் நல்ல விளைச்சல் கிடைத்து அதன் மூலம் செல்வம் பெருகிட வேண்டும் என இதனை நாம் கண்டுகொள்ளலாம்.

**3. இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் மக்களின் வாழ்வியல் அம்சங்கள் எவை?**

இந் நாட்டார் பாடலில் ஊடாக பல்வேறு வாழ்வியல் அம்சங்கள் புலப்படுகின்றன.

- உழவுத் தொழிலை ஆதாரமாக கொண்ட வாழ்வியல் காணப்படுகின்றது
- மாடுகள் வளர்த்து அதன் மூலம் பயன் பெறுதல், தொழிலை மேற்கொள்ளுதல்
- பொங்கல் பொங்குதல் எனும் பண்பாட்டு அம்சம் புலப்படுகின்றது
- எல்லோரும் வாழ வேண்டும் எனும் பொதுநலப் பண்பு காணப்படுகின்றது.
- இறைவனை அதாவது சிவபெருமாளை வழிபாடியற்றும் மரபு காட்டப்படுகின்றது.

## 02 அரிவி வெட்டும் பாடல்

- ❖ வயலில் நெல்லினை வெட்டியெடுக்கும் போது பாடப்படும் பாடல் இதுவாகும்
- ❖ ஆண்களும், பெண்களும் சோர்வின்றி சுறுசுறுப்பபாக அரிவி வெட்டுவதற்காக இப் பாடலைப் பாடுவார்கள்
- ❖ காவல் தெய்வம் ஐயனாரைக் குறித்து இப்பாடல் இடம் பெற்றுள்ளது.
- ❖ அரிவு வெயட்டும் வாலிபர்களுக்கு எவ்வித குற்றமும் வரக்கூடாது என ஐயனாரிடம் வேண்டப்படுகின்றது



S.Rajkumar

## வினாக்கள்

**1.. இப் பாடலில், அரிவு வெட்டும் இளந்தாரிமாரை எவ்வாறு உவமித்து கூறியுள்ளனர்**

- ஆற்றோடு ஆற்று நீர் அசைந்து வருதல் போல்
- ஆற்று நீரோடு பறவையினம் தொடர்ந்து வருதல் போல்
- சேற்றொடு வெள்ளம் தெளிந்து வருதல் போல்
- செங்கால் நாரையினம் மேய்ந்து வருதல் போல்

**2. அரிவி வெட்டும் அரிவாளின் சிறப்பு எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகின்றது.**

மட்டுருக்கு எனப்படும் ஒருவகையான இரும்பினால் அரிவாள் செய்து, அதற்கு மாவிலங்க மரத்தினாலான பிடியினை சீவி இறுக்கி போட்டு, வெட்டும் பிடி கையை விட்டு நழுவி செல்லாமல் சிறப்பாக இருப்பதற்காக வெள்ளித்தகடு கொண்டு விரல் கட்டம் இடப்பட்டு இருப்பதாக கூறப்படுகின்றது

**3. கண்ணூறு, நாவூறு என்பவற்றின் பொருளினை தெளிவுறுத்துக?**

கண்ணூறு – ஒருவரின் மீது பலரது கண்பார்வை படுவதால் கண்களால் ஏற்படும் குற்றம்
நாவூறு - ஒருவரைப் பற்றி பலர் கதைப்பதால் நாவின் மூலம் ஏற்படும் குற்றம்

**4. சினந்தருவி வெட்டுதல், வளந்தருவி வெட்டுதல் என்பதால் விளக்கப்படுவது யாது?**

சிந்தருவி வெட்டுதல் - மிக வேகமாக அரிவி வெட்டுதல்
வளந்தருவி வெட்டுதல் - நன்கு முதிர்ந்த அரிவி வெட்டுதல்

**5. "வளந்தருவி வெட்டும் இளந்தாரி மாரை**
**நாவூறு வராமல் காரும் ஐயனே"** **( O/L 2017 01. VI )**

அ. இப்பாடல் எத்தொழிலுடன் தொடர்புடையது.
உழவுத்தொழில் அரிவி வெட்டும் தொழில்
ஆ. இதில் வந்துள்ள கிராமிய நம்பிக்கை யாது?
நாவூறு வராமல் காக்கும் படி கூறல்

## 03. மீனவர் பாடல்

- ❖ கடலில் மீன் பிடிக்கும் போது அலுப்பு நீங்கி உற்சாகத்தை பெறும் பொருட்டு இப்பாடல் பாடப்படுகின்றது.
- ❖ கடற்கரையில் வாழும் மக்கள் இயல்பாகவே கடலை நம்பி வாழ்க்கை நடாத்துபவர்கள்.
- ❖ இப் பாடலில் ஏலேலோ, ஜலசா எனும் ஒலிக் குறிப்புச் சொற்களை அதிகளவில் மீனவர் பாடலில் பயன்படுத்துகின்றனர்.

**1.. இப் பாடலில் மீனவர் படும் துன்பம் பற்றி யாது கூறப்படுகின்றது?**

உச்சி வெய்யிலில் உடல் உருக கடலில் மீன் பிடித்தல் கடலை நம்பி அவர்கள் வாழ்க்கை விளங்குதல்

**2. பல கஷ்ரத்தின் மத்தியிலும் நான் உன் நினைவுடனே இருக்கின்றேன் எனும் தன்மை எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது.?**

மண்ணை நம்பி மரம் இருக்கிறது, மரத்தை நம்பி கிளையிருக்கிறது, கிளையை நம்பி பூவிருக்கிறது, பூவை நம்பி பிஞ்சு இருக்கிறது, பிஞ்சை நம்பிப் பழம் இருக்கிறது, எனக் கூறி இதைப் போலவே நானும் உன்னை நம்பி இருக்கிறேன். இவை ஒன்றுடன் ஒன்று தங்கியிருப்பதைப் போல நானும், "உன்னை நம்பி நானிருக்கிறேன்" என் கூறிகின்றான். மேலும் உச்சி வெய்யிலில் நின்று உருகுகின்றேன், என் உள்ளம் உன்னிடமே உள்ளது இந்தக் கஷ்ரத்தின் மத்தியிலும் நான் உன் நினைவுடனே இருக்கின்றேன். எனும் இக் கருத்து ஓர் தலைவன் தன் காதலியைக் குறித்து பாடுவதாகவும், ஓர் மீனவன் கடலை நோக்கி பாடுவதாகவும் இரு அர்த்தங்களில் காணமுடியும்



S.Rajkumar

**3. மண்ணை நம்பி ஏலேலோ மரம் இருக்கிறது ஐலசா**
**மரத்தை நம்பி ஏலேலோ கிளையிருக்கிறது ஐலசா**
**கிளையை நம்பி ஏலேலோ பூவிருக்கிறது ஐலசா** **( O/L 2018 01. VIII )**

அ. இப்பாடலை பாடுபவர்கள் யார்?
மீனவர்கள்

ஆ. இதனூடாக கவிஞர் எதனை புலப்படுத்த விரும்புகின்றார்.
ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றது என்பதை

## 04. காதல் பாடல்

- காதல் வயப்படும் காதலன், காதலி பற்றிய வெளிப்பாடு கிராமிய மண்வாசணையுடன் புலப்படுகின்ற தன்மையை இக்காதற் பாட்டில் காணலாம்.
- ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே .. எனத் தொடங்கும் இப்பாடல் முஸ்லிம் கலாச்சாரத்தை அடிப்படையாக கொண்ட ஓர் காதற்பாடலாகும்
- ஓர் காதலன் தன் காதலியை பல பெயர்கள் கூறி அவளை வர்ணிப்பதோடு, தனது நம்பிக்கை ஊட்டும் வார்த்தைகளையும் ஒப்புவிக்கின்றான் இதனையே இப் பாடல் விளங்குகின்றது.

**1. ஆசைக் கிளியே என்ர ஆசியத்து உம்மாவே ஓசைக் குரல்லே..**

அ. இங்கு ஆசியத்து உம்மா எனக் குறிக்கப்படுவது யாது ?
காதலியின் பெயர்

ஆ. இக் கூற்று யாரால் உரைக்கப்பட்டுள்ளது ?
காதலனால்

**2. மாமி மகளே என்ர மருதக்கிளி வங்கிசமே ஏலங்கிராம்பே...** **( O/L 2019 01. IV )**

அ. வங்கிசம் என்பது உணர்த்தும் கருத்து யாது? கிராம்பு என்பதன் திருந்திய வடிவம் யாது?
வம்சம், குடும்பம் கிராம்பு – கராம்பு

ஆ. மாமி மகளே என்பதன் ஊடாக வெளிப்படுத்தப்படும் உறவு முறை யாது?
மாச்சாள், மைத்தனி

**3. அல்லா மேல் ஆனை உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி...**

அ. காட்டுப்பள்ளி என்பதன் பொருள் யாது?
மயானம்

ஆ. இங்கு ஆணை என்பது எதனை குறிக்கின்றது. **( O/L 2020 01. IV )**
சத்தியம்

இ. அடையாட்டி எனும் சொல் குறிப்பது யாது?
திருமணம் செய்துசொள்ளாவிட்டால்

**4. சீனத்து செப்பே என்ர சிங்காரப் பூநிலவே...** **( O/L 2016 01. V )**

அ. இங்கு மச்சி என்பதன் திருத்தமான வடிவம் யாது?
மச்சாள் மைத்துனி

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?
உருவகம்

**5. கடலே நீ இரையாதே காற்றே நீ வீசாதே நிலவே நீ எறியாதே என்ர நீல வண்டு போய்ச் சேருமட்டும்..**

அ. இவ்வடிகளின் வாயிலாக காதலனின் எத்தகு உணர்வு வெளிப்படுகின்றது?
காதலி மீது கொண்ட அன்பு, அக்கறை

ஆ. நிலவே நீ எறியாதே.. என காதலன் உரைக்கக் காரணம் யாது?
நிலவு வானிலே தோன்றினால் இரவு வந்துவிடும் அதனால் தன் காதலி அச்சமடைவாள் எனவும், தன்னை பிரிந்து செல்வதால் நிலவின் ஒளி அவளுக்கு துன்பத்தை கொடுக்கும் என்பதாலும்

S.Rajkumar

**6. இப் பாடலில் காதலன் தன் காதலியை எவ்வாறாக வர்ணித்து பல பெயர்களினால் உருவகிக்கின்றான்?**

**( O/L 2018 07. அ )**

ஆசைக்கிளி, சீனத்து செப்பு, ஏலாங்கிராம்பே, மருதக்கிளி வங்கிசம், நீலவண்டு சிங்கார பூநிலா, ஓசைக்குரல்

**7. காதலன் தன் காதலி மீது கொண்ட அதீத அன்பு எவ்வாறு புலப்படுகின்றது?**

மேற் குறித்த நாட்டார் பாடல் வாயிலாக காதலன் தன் காதலி மீது கொண்ட அன்பு அழகுற புலப்பட்டு நிற்கின்றது. அத்தகு தன்மைகளை இங்கு நோக்கும் போது,

- தன் காதலியைப் பல பெயர் கூறி ஆசையோடு அழைத்தல்
  உ- ம் - நீலவண்டு, ஆசைக்கிளி
- தான் உன்னை அடையாவிடில் தான் இறந்து விடுவேன் எனக் கூறுதல் அதாவது தன் காதலி கிடைக்காது போனால் தான் இறந்து மாயனத்திடை சென்று விடுவேன் எனக் கூறுவதன் ஊடாக காதலனது ஆழமான அன்பு வெளிப்படுகின்றது.
- ஓதிப்படிச்சி ஊர் புகழும் அளவில் வாழ்ந்தாலும் ஏழைக்கு தீங்கு செய்தால் இறைவன் ஒருபோதும் ஏற்கமாட்டான் என்பதன் மூலம் அவளுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றான்
- இயற்கைகளை பார்த்து தன் காதலி பயப்பட கூடாது என்பதற்காக, தன் காதலி செல்லும் வழியில், காற்றின் வேகம், கடலின் ஓசை, நிலாவின் ஒளி இவையனைத்தும் தன் காதலிக்கு அச்சத்தை ஏற்படுத்தி விடும் எனக் கூறி அவற்றின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளுமாறு உத்தரவிடுதல்.
- உறங்கும் போது தன் காதலி காலடியில் வந்திருந்து கால் ஊன்ற கனவு கண்டதாக கூறப்படுவதன் ஊடாக எந்தநேரமும் அவளின் நினைவிலேயே வாழ்வதாக கூறப்படுதல்
- தன் மச்சி, மாமி மகள், ஆசியத்து உம்மா என உரிமை கொண்டாடி அவளோடு அன்பு பாராட்டுதல்.
- தூது விடவா, என அவள் சம்மதத்தை நாடி நிற்றல்
- இனிமையான குரல் கொண்டவள் தன் காதலி எனக் கூறி நிற்றல்
- அவளுக்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுவதன் ஊடாக தன் காதலி மீது கொண்ட அன்பின் ஆழத்தை வெளிப்படுத்தி நிற்கின்றான் காதலன்.
  இவ்வாறு காதலன் காதலி மீது கொண்ட அன்பானது அழகுற புலப்பட்டு நிற்கின்றது.

**8. காதலன், தன் காதலை நம்புமாறு எடுத்துக்காட்டும் வரிகள் எவை? தன் காதலிக்காக இயற்கையை எவ்வாறு கட்டுப்படுத்துகின்றான். ( O/L 2018 07. ஆ )**

- கைவிடுவேன் என்று நினைத்து கவலைப்படவேண்டாம் பெண்ணே தான் உன்னை அடையாவிடில் தான் இறந்து விடுவேன் எனக் கூறுதல் அதாவது தன் காதலி கிடைக்காது போனால் தான் இறந்து மாயனத்திடை சென்று விடுவேன் எனக் கூறுவதன் ஊடாக காதலனது ஆழமான அன்பு வெளிப்படுகின்றது.

  **கைவிடுவேன் என்று எண்ணி கவலைப்படாதே கண்ணி**
  **அல்லா மீது ஆணை உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி**

- ஓதிப்படிச்சி ஊர் புகழும் அளவில் வாழ்ந்தாலும் ஏழைக்கு தீங்கு செய்தால் இறைவன் ஒருபோதும் ஏற்கமாட்டான் என்பதன் மூலம் அவளுக்கு நம்பிக்கை ஊட்டுகின்றான்

  **ஓதிப்படிச்சி ஊர் புகழ வாழ்ந்தாலும்**
  **ஏழைக்கு செய்தீங்கை- அல்லா எள்ளளவும் ஏற்கமாட்டான்**

- இயற்கைகளை பார்த்து தன் காதலி பயப்பட கூடாது என்பதற்காக, தன் காதலி செல்லும் வழியில், காற்றின் வேகம், கடலின் ஓசை, நிலாவின் ஒளி இவையனைத்தும் தன் காதலிக்கு அச்சத்தை ஏற்படுத்தி விடும் எனக் கூறி அவற்றின் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்ளுமாறு உத்தரவிடுதல்.

  **கடலே இரையாதே காற்றே நீ வீசாதே**
  **நிலவே எறிக்காதே – என்ர நீலவண்டு போய் சேருமட்டும்**

S.Rajkumar

**9. இப் பாடலில் இழையோடியிருக்கும் வாழ்வியல் பண்புகளை எடுத்துரைக்க?**

மேற் குறித்த நாட்டார் பாடல் காதல் பாடல் எனும் தலைப்பில் ஒரு இஸ்லாமிய சமூகத்தின் பேச்சு வழக்கினை கொண்டு அமையப் பெற்றுள்ளது. அப்பாடலில் புலப்படும் வாழ்வியல் அம்சங்களை நோக்கும் போது,

- உறவு முறை பாராட்டும் தன்மை காணப்படுகின்றது
  உ.ம் - மாமிமகள், மச்சி
- அல்லா மீது ஆணை செய்தல். இதன் வாயிலாக இறை நம்பிக்கை காட்டப்படுகின்றது.
  உண்மைக் காதல் இங்கு காட்டப்படுதல்
  உ.ம்.- உன்னை அடையாட்டி காட்டுப்பள்ளி என கூறுதல்
- ஓதிப் படிச்சு.. என்பதன் ஊடாக இஸ்லாமியரது புனித நூலை படித்தல் எனும் தன்மை காட்டப்படுகின்றது
- காவல் செய்யும் போது உறங்குவதற்கு பரண் அமைக்கும் தன்மை புலப்படுகின்றது.

S.Rajkumar

## கடந்த கால வினாக்கள்

**4. சீனத்து செப்பே என்ர சிங்காரப் பூநிலவே...** **( O/L 2016 01. V )**

அ. இங்கு மச்சி என்பதன் திருத்தமான வடிவம் யாது?

மச்சாள் மைத்துனி

ஆ. இவ்வடிகளில் வெளிப்படும் அணி யாது?

உருவகம்

**1. "வளந்தருவி வெட்டும் இளந்தாரி மாரை**
**நாவூறு வராமல் காரும் ஐயனே"** **( O/L 2017 01. VI )**

அ. இப்பாடல் எத்தொழிலுடன் தொடர்புடையது.

உழவுத்தொழில் அரிவி வெட்டும் தொழில்

ஆ. இதில் வந்துள்ள கிராமிய நம்பிக்கை யாது?

நாவூறு வராமல் காக்கும் படி கூறல்

3. **மண்னை நம்பி ஏலேலோ மரம் இருக்கிறது ஐலசா**
**மரத்தை நம்பி ஏலேலோ கிளையிருக்கிறது ஐலசா**
**கிளையை நம்பி ஏலேலோ பூவிருக்கிறது ஐலசா**
**பூவை நம்பி ஏலேலோ பிஞ்சு இருக்கிறது ஐலசா** **( O/L 2018 01. VIII )**

அ. இப்பாடலை பாடுபவர்கள் யார்?

மீனவர்கள்

ஆ. இதனூடாக கவிஞர் எதனை புலப்படுத்த விரும்புகின்றார்.

ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றது என்பதை

**2. மாமி மகளே என்ர மருதக்கிளி வங்கிசமே ஏலங்கிராம்பே...** **( O/L 2019 01. IV )**

அ. வங்கிசம் என்பது உணர்த்தும் கருத்து யாது? கிராம்பு என்பதன் திருந்திய வடிவம் யாது?

வம்சம், குடும்பம் கிராம்பு – கராம்பு **( O/L 2016 02. II)**

**3** ஆ. இங்கு ஆணை என்பது எதனை குறிக்கின்றது. **( O/L 2020 01. IV )**

சத்தியம்

இ. அடையாட்டி எனும் சொல் குறிப்பது யாது?

திருமணம் செய்துசொள்ளாவிட்டால்

**பட்டி பெருக வேணும் தம்பிரானே**
**பாற்பானை பொங்கவேண்டும்...**

அ. கலப்பையை குறிக்கும் இரு சொற்களும் எவை?

ஏர், மேழி

ஆ. இப் பாடலில், உழவர்களின் பரந்த மனப்பாங்கு எவ்வாறு வெளிப்படுகின்றது?

- உலகில் உள்ளவர்கள் நன்றாக வாழ வேண்டும் என வேண்டுதல்
- நாடு நன்றாக செழித்திருக்க வேண்டும்
- மழை நாட்டில் நன்றாக பெய்ய வேண்டும்
- உழவுத் தொழில் சிறப்புற வேண்டும் இதனால் எல்லோரும் சிறப்பாக வாழவேண்டும் என கூறியுள்ளனர்

**6.** இப் பாடலில் காதலன் தன் காதலியை எவ்வாறாக வர்ணித்து பல பெயர்களினால் உருவகிக்கின்றான்? **( O/L 2018 07. அ )**

**8.** காதலன், தன் காதலை நம்புமாறு எடுத்துக்காட்டும் வரிகள் எவை? **( O/L 2018 07. ஆ)**



S. Rajkumar